# வகுப்பு-10

# இயல் 3

# இலக்கணம்

# தொகாநிலைத்தொடர்

## III. சான்று தருக.

1. தொகாநிலைத் தொடர்

அ) மதுரை சென்றான் ஆ) பாட்டு பாடினேன்

இ) கரும்பு தின்றான் ஈ) குயில் கூவியது

2. எழுவாய்த்தொடர்

அ) பாடினாள் கண்ணகி ஆ) கேட்ட பாடல்

இ) பாடி மகிழ்ந்தனர் ஈ) கண்ணகி பாடினாள்

3. எழுவாய்த்தொடர் (பெயர்ப்பயனிலை)

அ) இனியன் கவிஞர் ஆ) காவிரி பாய்ந்தது

இ) பேருந்து வருமா? ஈ) கண்ணகி பாடினாள்

4. எழுவாய்த்தொடர் (வினைப்பயனிலை)

அ) இனியன் கவிஞர் ஆ) காவிரி பாய்ந்தது

இ) பேருந்து வருமா? ஈ) பாடி மகிழ்ந்தனர்

5. எழுவாய்த்தொடர் (வினாப்பயனிலை)

அ) இனியன் கவிஞர் ஆ) காவிரி பாய்ந்து

இ) பேருந்து வருமா? ஈ) பாடினாள் கண்ணகி

6. விளித்தொடர்

அ) நண்பன் எழுதினான் ஆ) நண்பா எழுது!

இ) எழுதினான் நண்பன் ஈ) பேருந்து வருமா?

7. வினைமுற்று தொடர்

அ) கண்ணகி பாடினாள் ஆ) வந்தாள் கண்ணகி

இ) பாடிய கண்ணகி ஈ) பாடி மகிழ்ந்தாள்

8. பெயரெச்சத் தொடர்

அ) கேட்ட பாடல் ஆ) பாடி மகிழ்ந்தனர்

இ) கட்டுரையைப் படித்தாள் ஈ) நண்பா எழுது

9. வினையெச்சத் தொடர்

அ) பேருந்து வருமா? ஆ) மாணவனே எழுது

இ) கேட்ட பாடல் ஈ) பாடி மகிழ்ந்தனர்

10. வேற்றுமைத்தொடர்

அ) கட்டுரை படித்தாள் ஆ) அறிஞர் பொன்னாடை

இ) அன்பால் கட்டினார் ஈ) மதுரை சென்றான்

11. இரண்டாம் வேற்றுமைத் தொடர்

அ) கட்டுரை படித்தாள் ஆ) கட்டுரையைப் படித்தாள்

இ) மதுரை சென்றான் ஈ) கரும்பு தின்றான்

12. நான்காம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்

அ) சென்னை வந்தான் ஆ) கட்டுரையைப் படித்தாள்

இ) அன்பால் கட்டினார் ஈ) அறிஞருக்குப் பொன்னாடை

13. இடைச்சொல் தொடர்

அ) நனிநன்று ஆ) மற்றொன்று இ) வருக வருக ஈ) அன்பால் கட்டினார்

14.உரிச்சொல் தொடர்

அ) மற்றொன்று ஆ) சாலச் சிறந்தது இ) வருக வருக ஈ) தாயும் சேயும்

15. அடுக்குத்தொடர்

அ) பழகப் பழகப் பாலும் புளிக்கும் ஆ) வந்து போனான்

இ) நீர் சலசலவென ஓடியது ஈ) அண்ணன் தம்பி

16.கூட்டுநிலைப் பெயரெச்சம்

அ) வடித்த கஞ்சி ஆ) வந்தார் அண்ணன்

இ) கேட்க வேண்டிய பாடல் ஈ) கேட்ட பாடல்

## IV.கூறியவாறு செய்க.

17. இனியன் (எழுவாய்த்தொடர் ஆக்குக)

அ) இனியன் வந்தான் ஆ) வந்தான் இனியன்

இ) வந்துசென்றான் ஈ) வந்த இனியன்

18. பேருந்து (வினாப் பயனிலைக் கொண்டு தொடர் அமைக்க)

அ) இனியன் கவிஞர் ஆ) காவிரி பாய்ந்தது

இ) பேருந்து வருமா? ஈ) பாடினாள் கண்ணகி

19. கண்ணகி பாடினாள் (வினைமுற்று தொடர் ஆக்குக)

அ) பாடிய கண்ணகி ஆ) பாடுகின்ற கண்ணகி

இ) பாடும் கண்ணகி ஈ) பாடினாள் கண்ணகி

20. பாட்டு பாடினேன் (வேற்றுமை தொடராக்குக)

அ) பாடினேன் பாட்டு ஆ) பாட்டைப் பாடினேன்

இ) பாடிய பாட்டு ஈ) பாடி மகிழ்ந்தேன்

21. கேட்டேன் பாடல் (பெயரெச்சத் தொடர் ஆக்குக)

அ) பாடல் கேட்டேன் ஆ) கேட்ட பாடல்

இ) கேட்டு மகிழ்ந்தான் ஈ) கேட்க வேண்டிய பாடல்

22. நன்று (உரிச்சொல் தொடராக்குக)

அ) மிகநன்று ஆ) நனிநன்று இ) நன்றல்லது ஈ) உயர்நன்று

23. முனிவர் (உரிச்சொல் தொடர் ஆக்குக)

அ) பெரு முனிவர் ஆ) தவமுனிவர் இ) நாதமுனி ஈ) குரு முனிவர்

24. நண்பன் (விளித்தொடர் ஆக்குக)

அ) நண்பா ஆ) நண்பனா இ) நட்பு கேள் ஈ) நண்பன் வந்தான்

25. மாணவன் கேட்டான் (விளித்தொடர் ஆக்குக)

அ) மாணவனா கேட்டான் ஆ) மாணவனே கேள்

இ) கேட்டான் மாணவன் ஈ) கேட்ட மாணவன்

26. பாடினர் மகிழ்ந்தனர் ( வினையெச்சத் தொடர் ஆக்குக)

அ) கேட்ட பாடல் ஆ) பாடி மகிழ்ந்தனர்

இ) மகிழ்ந்தனர் பாடினர் ஈ) மகிழுந்து பாடினர்

27. ஓடிய முருகன் (வினைமுற்றுத்தொடர் ஆக்குக)

அ) முருகன் ஓடினான் ஆ) முருகன் ஓடிலன்

இ) ஓடினான் முருகன் ஈ) ஓடிவந்தான்

28. கட்டுரையைப் படித்தாள் (தொகை ஆக்குக)

அ) கட்டுரை படித்தாள் ஆ) கட்டுரையைப் படித்திலள்

இ)படித்தாள் கட்டுரையை ஈ) படித்து மகிழ்ந்தாள்

29.நகர் (உரிச்சொல் தொடர் ஆக்குக)

அ) பெருநகர் ஆ) நகராட்சி இ) கடிநகர் ஈ) புறநகர்

30. படித்தான் (பெயரெச்சத்தொடர் ஆக்குக)

அ) படித்த மாணவன் ஆ) படித்துத் தேறினான்

இ) படித்தான் மாணவன் ஈ) படிக்கும் மாணவன்

31. குதித்து (வினையெச்சத்தொடர் ஆக்குக)

அ) குதித்த குரங்கு ஆ) தாவியதுகுரங்கு

இ) தாவி குதித்தது ஈ) குதித்து தாவியது

32. பூ (அடுக்குத்தொடர் ஆக்குக)

அ) வண்ண வண்ண பூக்கள் ஆ) பூ பறிக்காதீர்

இ) பூ பூ பூ ஈ) மணமிக்க பூ

33. பள்ளி சென்றான் ( வேற்றுமைத்தொடர் ஆக்குக)

அ) பள்ளிக்கூடம் சென்றான் ஆ) பள்ளிக்குச் சென்றான்

இ) சென்றான் பள்ளி ஈ) பள்ளி சென்றிலன்

34. மற்றொன்று (பிரித்து எழுதுக)

அ) மற்றோ+ன்று ஆ) மற்+றோ+ன்று

இ) மற்ற+ ஒன்று ஈ) மற்று+ ஒன்று

35. தலைவணங்கு (தொகாநிலைத் தொடர் ஆக்குக)

அ) வணங்கு தலை ஆ) தலையை வணங்கு

இ) தலைக்கு வணங்கு ஈ) தலையால் வணங்கு

## V. இலக்கணக்குறிப்பு எழுதுக.

36. காற்று வீசியது

அ) தொகைநிலைத்தொடர் ஆ) தொகாநிலைத்தொடர்

இ) பெயரெச்சத்தொடர் ஈ) வினையெச்சத்தொடர்

37. இனியன் கவிஞர்

அ) எழுவாய்த்தொடர் ஆ) விளித்தொடர்

இ) வினைமுற்றுத்தொடர் ஈ) பெயரெச்சத்தொடர்

38. காவிரி பாய்ந்தது

அ) பெயர்ப்பயனிலை ஆ) வினைப்பயனிலை

இ) வினாப்பயனிலை ஈ) விளித்தொடர்

39. முருகா வா!

அ) எழுவாய்த்தொடர் ஆ) பெயரெச்சத்தொடர்

இ) வினையெச்சத்தொடர் ஈ) விளித்தொடர்

40. பாடினாள் கண்ணகி

அ) எழுவாய்த்தொடர் ஆ) வினைமுற்றுத்தொடர்

இ) பெயரெச்சத்தொடர் ஈ) வேற்றுமைத்தொடர்

41. கேட்ட பாடல்

அ) வினைமுற்றுத்தொடர் ஆ) எழுவாய்த்தொடர்

இ) பெயரெச்சத்தொடர் ஈ) வினையெச்சத்தொடர்

42. பாடி மகிழ்ந்தனர்

அ) எழுவாய்த்தொடர் ஆ) வினைமுற்றுத்தொடர்

இ) பெயரெச்சத்தொடர் ஈ) வினையெச்சத்தொடர்

43. கம்பரது நூல்

அ) இரண்டாம்வேற்றுமைத்தொடர் ஆ) மூன்றாம் வேற்றுமைத் தொடர்

இ) நான்காம் வேற்றுமைத்தொடர் ஈ) ஐந்தாம் வேற்றுமைத் தொடர்

44. கட்டுரையைப் படித்தாள்

அ) எழுவாய்த்தொடர் ஆ) இரண்டாம் வேற்றுமைத்தொடர்

இ) மூன்றாம் வேற்றுமைத்தொடர் ஈ) நான்காம் வேற்றுமைத்தொடர்

45. அன்பால் கட்டினார்

அ) இரண்டாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்

ஆ) மூன்றாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்

இ) நான்காம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்

ஈ) ஐந்தாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்

46. அறிஞருக்குப் பொன்னாடை

அ) மூன்றாம் வேற்றுமைத்தொடர் ஆ) நான்காம் வேற்றுமைத்தொடர்

இ) ஐந்தாம் வேற்றுமைத்தொடர் ஈ) ஆறாம் வேற்றுமைத்தொடர்

47. மற்றொன்று

அ) வேற்றுமைத்தொடர் ஆ) இடைச்சொல்தொடர்

இ) உரிச்சொல் தொடர் ஈ) அடுக்குத்தொடர்

48. சாலச் சிறந்தது

அ) வேற்றுமைத்தொடர் ஆ) எழுவாய்த்தொடர்

இ) இடைச்சொல் தொடர் ஈ) உரிச்சொல் தொடர்

49. கடிமலர், கடிநகர், கடிவிடுதும், கடிநுனி, உறுபசி, தவச்சிறிது, நனிநன்று, தவமுனிவர்

அ) இடைச்சொல் தொடர்கள் ஆ) உரிச்சொல் தொடர்கள்

இ) தொழிற்பெயர்கள் ஈ) வேற்றுமைத் தொடர்கள்

50. ஓய்ந்து உறங்கு

அ) வினைமுற்றுத்தொடர் ஆ) பெயரெச்சத்தொடர்

இ) வினையெச்சத்தொடர் ஈ) வேற்றுமைத்தொடர்

51. இறங்கினார் முகமது, வந்தார் அண்ணன், பாடினாள் கண்ணகி, ஓடினான் வீரன்

அ) எழுவாய்த்தொடர்கள் ஆ) வினைமுற்றுத்தொடர்கள்

இ) பெயரெச்சத்தொடர்கள் ஈ) வினையெச்சத்தொடர்கள்

52. அவர் பாடகர், அரசன் வந்தான், இனியன் கவிஞர், மழை வருமா?

அ) எழுவாய்த்தொடர்கள் ஆ) வினைமுற்றுத்தொடர்கள்

இ) வேற்றுமைத்தொடர்கள் ஈ) பெயரெச்சத்தொடர்கள்

53. பெரிய பானை, கேட்ட பாடல், வந்த பையன், பாடிய பாடல், சிறிய மலை, வடித்த கஞ்சி

அ) வினைமுற்றுத்தொடர்கள் ஆ) பெயரெச்சத்தொடர்கள்

இ) வினையெச்சத்தொடர்கள் ஈ) வேற்றுமைத்தொடர்கள்

54. கேட்க வேண்டிய பாடல், சொல்லத்தக்க செய்தி, செய்யக்கூடிய செயல், செய்யவல்ல செயல்

அ) பெயரெச்சத்தொடர்கள் ஆ) கூட்டுநிலை பெயரெச்சங்கள்

இ) வினையெச்சங்கள் ஈ) இடைச்சொல் தொடர்கள்

## VI. நிரப்புக.

55. தொகாநிலைத்தொடர் ________ வகைப்படும்.

அ) 3 ஆ) 6 இ) 9 ஈ) 5

56. ஒரு தொடர் மொழியில் இருசொற்கள் இருந்து அவற்றின் இடையில் சொல்லோ உருபோ இல்லாமல் அப்படியே பொருளை உணர்த்துவது ________ஆகும்.

அ) தொகைநிலைத்தொடர் ஆ) தொகாநிலைத்தொடர்

இ) பெயரெச்சத்தொடர் ஈ) வினையெச்சத்தொடர்

57. எழுவாயுடன் பெயர், வினை, வினா ஆகிய பயனிலைகள் தொடர்வது__________ஆகும்.

அ) எழுவாய்த்தொடர் ஆ) விளித்தொடர்

இ) வினைமுற்றுத்தொடர் ஈ) வினாத்தொடர்

58. விளியுடன் வினை தொடர்வது ________ ஆகும்.

அ) எழுவாய்த்தொடர் ஆ) விளித்தொடர்

இ) வினைமுற்றுத்தொடர் ஈ) வினையெச்சத்தொடர்

59. வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது __________ ஆகும்.

அ) வினையெச்சத்தொடர் ஆ) வேற்றுமைத்தொடர்

இ) எழுவாய்த்தொடர் ஈ) வினைமுற்றுத்தொடர்

60. முற்றுப் பெறாத வினை பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிவது ________ எனப்படும்./ ஒரு எச்சவினை பெயரைக் கொண்டு முடிவது _________ எனப்படும்.

அ) வினைமுற்றுத்தொடர் ஆ) பெயரெச்சத்தொடர்

இ) வினையெச்சத்தொடர் ஈ) உரிச்சொல் தொடர்

61. முற்றுப்பெறாத வினை, வினைச்சொல்லைக் கொண்டு முடிவது _________ ஆகும். /

ஒரு எச்சவினை, வினைச்சொல்லைக் கொண்டு முடிவது ________ ஆகும்.

அ) வினைமுற்றுத்தொடர் ஆ) பெயரெச்சத்தொடர்

இ) வினையெச்சத்தொடர் ஈ) வேற்றுமைத்தொடர்

62. வேற்றுமை உருபுகள் வெளிப்பட அமையும் தொடர்கள்________ ஆகும்.

அ) வேற்றுமைத்தொகைகள் ஆ) எழுவாய்த்தொடர்

இ) விளித்தொடர் ஈ) வேற்றுமைத்தொகாநிலைத் தொடர்கள்

63. இடைச்சொல்லுடன் பெயரோ வினையோ தொடர்வது ________ ஆகும்.

அ) வேற்றுமைத்தொடர் ஆ) இடைச்சொல் தொடர்

இ) உரிச்சொல் தொடர் ஈ) வினையெச்சத்தொடர்

64. உரிச்சொல்லுடன் பெயரோ வினையோ தொடர்வது ________ஆகும்.

அ) இடைச்சொல் தொடர் ஆ) உரிச்சொல் தொடர்

இ) வேற்றுமைத்தொடர் ஈ) வினையெச்சத்தொடர்

65. ஒரு சொல் இரண்டு மூன்று முறை அடுக்கித் தொடர்வது ________ ஆகும்.

அ) இரட்டைக்கிளவி ஆ) இரட்டைத்தொடை

இ) இரட்டைச்சொல் ஈ) அடுக்குத்தொடர்

66. ஒன்றிற்கு மேற்பட்ட எச்சங்கள் சேர்ந்து பெயரைக் கொண்டு முடிவது ________எனப்படும்.

அ) பெயரெச்சங்கள் ஆ) வினையெச்சங்கள்

இ) கூட்டு நிலைப் பெயரெச்சங்கள் ஈ) வேற்றுமைத்தொடர்கள்

67. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்த காரணமாக அமைவது________.

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்